CC NO. 189/2010 07.05.2026

PW9 பாலாஜி S/o. ராஜசேகரன்

( **சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது** ).

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கின் புகார்தாரர் அவரது புகார் மனு, போலீசார் விசாரணையில் அவரது தந்தை ஹாலீல் படுத்திருந்ததாகவும், அவரது தாயார் அறைக்குள் ஒரு கதவு திறந்து, மற்றொரு கதவு அடைத்து படுத்திருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதேபோல் அவர் அவரது தந்தை இயற்கை உபாதைக்காக வீட்டின் கதவை திறந்து வைத்திருந்தார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகார் மனுவில் அவரது செயினை அறுத்து சென்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு சொத்து அறுத்ததுபோல் இல்லாமல், வளையத்துடன் முழு செயினாக உள்ளது என்றால் சரிதான்.

2) அவ்வாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை, புகார்தாரர் சொன்னதுபோல் செயினை அறுத்து சென்றிருந்தால் நீதிமன்றத்தில் அறுந்த செயினையே நான் தாக்கல் செய்திருப்பேன், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த ஒரு சம்மந்தமும் இல்லை, எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை, அதேபோல் நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரியல்ல, இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரை உள்ள அனைவரும் ஒரே குடும்பத்தினர் என்றால் சரியல்ல, 1 முதல் 8 வரை ஆன சாட்சிகள் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது ஒரே குடும்பத்தினர் என்று ஒத்துக்கொண்டுள்ளனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சொன்னதுபோல் சம்பவம் நடந்திருந்தால் சம்பவ இடத்திற்கு அருகே உள்ளவர்களை சாட்சியாக சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஆகியவற்றை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில்,

சொன்ன இடத்தில் எதிரிகளை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.